**<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், அரியலூர்</u>**

பி.வா.சா. 1– முருகன் OS.No. 25 /2021 நாள் : 12.11.2025

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.</u>**

எனக்கு தாவாவில் கண்டுள்ள பணம் அனைத்தும் வங்கி பரிவர்த்தனை மூலமாகவே நடந்தது என்றால் சரிதான். வங்கி பரிவர்த்தனை அன்றி 4,65,000 ரூபாய் பணத்தை நான் நேரில் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. வங்கி பரிவர்த்தனை காலம் 2016 –2018 என்றால் சரிதான், இந்த காலக்கட்டத்தில்தான் வங்கியில் பணம் போடப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு செலுத்தப்பட்ட தொகையினை நான் எடுத்து பாலாவின் அப்பாவிடம் கொடுத்தேன். வங்கியில் செலுத்தப்பட்ட பணம் முழுவதும் எனக்காக வந்ததல்ல என்றும், 2ம் வாதியின் தகப்பனாருக்கு வந்தது என்ற விவரத்தை வங்கியில் எழுத்து மூலமாக தெரிவித்துள்ளேனா என்றால் இல்லை. வாதிகள் இந்த வழக்கினை தாக்கல் செய்வதற்கு முன்பாக நான் அனுப்பிய பணம் அனைத்தும் 2ம் வாதியின் தகப்பனாருக்கு கொடுத்துவிட்டதாக நான் எழுத்து மூலமாக எழுதிக்கொடுத்துவிட்டேனா என்றால் இல்லை. வாதி அனுப்பிய Notice க்கு பதில் Notice ல் அவ்வாறு நான் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான், ஆனால் அதை நான் எதிர்வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவாவில் கண்டுள்ள வாதி அனுப்பிய பணங்களை குறித்து நான் குறுக்கு விசாரணையிலும், எதிர் வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் ஒன்றுக்கொன்று சம்மந்தம் இல்லாமல் முரண்பாடான நிலைப்பாட்டில் இருக்கிறது என்றால் சரியல்ல. அதில் எது உண்மை என்றும் எனக்கு தெரியும் என்றால் உண்மைதான் சொல்கிறேன். 2ம் வாதியின் தந்தையின்

வங்கி கண்க்கிற்கு 1ம் வாதி பணம் அனுப்பியதை நான் எடுத்து கொடுத்தது குறித்து எழுத்து மூலமாக 2ம் வாதியின் தந்தைக்கு எழுத்து மூலமாக ஏதேனும் அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை.

(வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது).

ஒப்பம்.திருமதி.M.S.மணிமேகலை,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
அரியலூர்.